| 47½ ... | தீவு ... ... ... ... | 0 0 10 |

எல்லைகளாவன : வடக்கு-வெதிருவேகுடஓயா ஆறு; கிழக்கும், தெற்கும், மேற்கும்-நல்கேகந்தற ஆறு.

V.

பிரதம படம் 170.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|
| 93 ... | வெலிகமபத்தன ... ... ... ... | 13 0 24 |

எல்லைகளாவன : வடக்கு-174,177 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி ; கிழக்குந் தெற்கும்-பஸ்சறக்கோறளையின் எல்லை ; மேற்கு-70,607 ம், 70,612 ம், 45,269 ம் உரிமைப்படங்களில் கண்டிருக்குங் காணிகள்.

VI.

பிரதம படம் 170.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|
| 2½a ... | கொங்காதென்ன ... ... ... ... | 0 0 21 |

எல்லைகளாவன : வடக்கு-188,136 ம், 187,736 ம், 188,119 ம் உரிமைப்படங்களில் கண்டிருக்கும் காணிகள் ; கிழக்கு-கன்னங்கத்தே கங்காணி உரித்துப்பேசும் பில்லேகந்தறேவத்தை ; தெற்கு-ஓர் றோட்டு; மேற்கு-சி. எவ். எம். கோர்ஸ்வோட் அவர்கள் உரித்துப்பேசும் வெதிருவேவத்தை.

VII.

பிரதம படம் 170.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|
| 2w1 ... | றோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம் ... ... ... | 0 0 1·5 |

எல்லைகளாவன : வடக்கு-வதுளையிலிருந்து மட்டக்களப்புக்குப்போகும் ஓர் பெரிய றோட்டு ; கிழக்கும் தெற்கும்-70,606 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி ; மேற்கு-வெவெஸ்சதோட்டம் (45,269 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணியால் றோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட நிலத்தில் கூட்டப்பட்ட காணி.

VIII.

பிரதம படம் 170.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|
| 2w3 ... | றோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம் ... ... ... | 0 1 22 |

எல்லைகளாவன : வடக்கு-ஓர் றோட்டு, 70,612 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி ; கிழக்கு- 70,612 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி ; தெற்கும் மேற்கும்-மட்டக்களப்பிலிருந்து வதுளைக்குப்போகும் றோட்டு.

IX.

பிரதம படம் 170.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|
| 2w5 ... | றோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம் ... ... ... | 0 0 1·5 |

எல்லைகளாவன ; வடக்குங் கிழக்குந் தெற்கும்-வதுளையிலிருந்து மட்டக்களப்புக்குப்போகும் றோட்டு ; மேற்கு-70,608 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி.

X.

பிரதம படம் 170.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|
| 2w6 ... | உல்பன்அருவேவத்தை ... ... ... ... | 0 0 5 |
| 2w7 ... | றோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம் ... ... ... | 0 0 3 |
| 2w8 ... | உல்பன்அருவேவத்தை ... ... ... ... | 0 0 1 |
| | | 0 0 9 |

எல்லைகளாவன : வடக்கு-70,608 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி ; கிழக்கு-வதுளையிலிருந்து மட்டக்களப்புக்குப்போகும் பெரிய றோட்டு ; தெற்கும் மேற்கும்-70,608 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி.

XI.

பிரதம படம் 170.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|
| 2w11 ... | உல்பன்அருவேவத்தை ... ... ... ... | 0 0 4 |

எல்லைகளாவன : வடக்கு-வதுளையிலிருந்து மட்டக்களப்புக்குப்போகும் றோட்டு ; கிழக்குந் தெற்கும்-70,608 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி ; மேற்கு-ஓர் சுத்தற ஆறு.

3,656

[Uva S. O. 52—1909.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ௵ டிசம்பர் (மார்கழி)௴ 17 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

ஊவா மாகாணம் வெல்லாஸ்ஸப் பகுதியில் மெதகம்பத்துக்கோறளையைச் சேர்ந்த சேனபத்திய என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே 2 ஏக்கர் 11 பேர்ச்ச விசாலமுடையதும், சாமானியமாய் ஒயவலானேயென என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதும் 124 ம் பிரதமபடத்தில் 2 ந் துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-முடி உரித்துப்பேசும் ஒயவலானேயென; தெற்கு-பண்டியவெலகந்துற ஆறு; மேற்கு-முடி உரித்துப்பேசும் ஒயாவலனேயென.

3,657 * இங்கிலீசின் IV. ம் பாகம் 1803 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

[Ratnapura S. O. 19—1909.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஆண்டு டிசம்பர் (மார்கழி) ௴ 17 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையிலுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. ஜி. பெரேரா துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஜி. பெரேரா,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

சப்பிரகமுவ மாகாணம் ரத்தினபுரி டிஸ்திறிக்கில் நவதுன்கோறளையைச் சேர்ந்த மகுறுகொட என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே 3 ஏக்கர் 7 பேர்ச்ச விசாலமுடையதும் சாமானியமாய் கெனுவெபெவுலேகேனேபுலவ (4,088/9,179 ம் 9,180 ம் பிரதமபடத்திற் கண்டிருக்கும் காணி) என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதும் 88 ம் பிரதமபடத்தில் 31 ந் துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி; இதற்கெல்லைகளாவன: வடக்கு-ரத்தினபுரியிலிருந்து கலவானவுக்குப் போகும் றோட்டு; கிழக்கு-116,111 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி; தெற்கு-116,104 ம் 116,103 ம் உரிமைப்படங்களில் கண்டிருக்கும் காணிகள்; மேற்கு-112,068 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி.

3,658 * இங்கிலீசின் IV. ம் பாகம் 1804 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

[Tender for supplying Calves to the Government Vaccine Establishment, Kanatta.]

கனத்தையிலுள்ள கவர்ண்மேந்தாரின் பால்கட்டு கந்தோருக்குப் பால் கட்டுகிறதற்காகப் பசுக்கன்றுகள் கொடுப்போமென்று 1911 ம் ஆண்டு ஜூனி 30 ந் தேதி வரைக்கும் கொந்திறுத்து ஒப்பந்தம் செய்விருப்பமுள்ளவர்கள் தனித்தனி தங்கள் ஒப்பந்தக்கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திறுத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஓர் தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "கொந்திறுத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறை வருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடிதாசிகளை அரசிறைவருமானத் தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால் மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடிதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "கவர்ண்மேந்து பால் கட்டுங் கந்தோருக்குப் பசுக்கன்றுகள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடிதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1910 ம் ஆண்டு தை (ஜனவரி)மாதம் 4 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல் வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திறுத்து ஒப்பந்தக் கேள்விக் கடிதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக்கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்யத் தவறினால், கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக்கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் ரூபா 150 கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திறுத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திறுத்தைக் கையேற்ற அல்லது தக்கபிணை கொடுக்கத்தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய் விடும். கொந்திறுத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திறுத்து கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திறுத்து ஒப்பந்தக்காரன் ரூபா 300 பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச் சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம்வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக்கட்டியதொகை பிணையிற் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

9. ஒப்பந்தக் கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ண்மேந்தாருக்குண்டு.

10. மேலும் தேவையான விவரம் எல்லாம் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளவும்.

கொழும்பு, 1909 ம் ௵ மார்கழி ௴ 15 ந் தேதி.

(கையொப்பம்) கி. சி. கிறிவின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

[Tender for License to sell Opium by Retail, Anuradhapura.]

இத்தால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில், 1899 ம் ஆண்டு தொடக்கம் 1905 ம் ஆண்டு வரைக்கும் இயற்றப்பட்ட அபின் கட்டளைச் சட்டங்களின் ஏற்பாடுகளின்படி அநுராதபுரம் லோக்கல்போட்டின் எல்லை கட்குட்பட 1910 ம் ஆண்டின் முதல் ஆறு மாசங்களுக்கும் சில்லறையில் அபின் விற்பதற்கு ஒரே ஒரு லைசென்சு கொடுக்கப்படும். இதைக் கவர்னமேந்து இன்னும் ஆறு மாதங்களுக்கு அல்லது பன்னிரண்டு மாதங்களுக்கு நீடிக்கக்கூடும். குத்தகை வாங்கப் பிரியமானவர்கள் தங்கள் கேள்விப்பத்திரங்களில் பின்சொல்லும் லைசென்சுகளுக்கு வெவ்வேறு விகிதம் காட்டவேணும் :—

(a) 1910 ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கும் ;
(b) 1910 ம் ஆண்டின் பின் ஆறு மாதங்களுக்கும் ;
(c) 1911 ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கும் ;

லைசென்சுகள் இதன் கீழ் குறிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கமையக் கொடுக்கப்படும் :—

2 வது.—சொல்லப்பட்ட லைசென்சு விற்பனவுக்கு முத்திரைவைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை அநுராதபுரத்து லோக்கல்போட்டு செயர்மென்துரை அவர்கள் 1909 ம் ஆண்டு மார்கழி மீ 22 ந் திகதி புதன்கிழமை மத்தியானம் 12 மணிக்கு அநுராதபுரக் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளுவார்.

3 வது.—கேள்விக்காரன் தானேயாவது அல்லது எழுத்தில் அதிகாரம்பெற்ற அவன் காரியஸ்தனாயாவது அநுராதபுரக் கச்சேரியில் 1909 ம் ஆண்டு மார்கழி மீ 22 ந் திகதி புதன்கிழமை மத்தியானம் 12 மணிக்குச் சமுகமாயிருந்தாலன்றியும், தனது கேள்விப்பத்திரத் தொகையின் மூன்றிலொன்றைக் கட்ட ஆயத்தமாயிருந்தாலும் தவிரக் கேள்விப்பத்திரம் ஒன்றும் கவனிக்கப்படமாட்டாது.

4 வது.—கேள்விப்பத்திரங்கள் திருப்திகரமாயிராவிடின் அநுராதபுரம் லோக்கல்போட்டுச் செயர்மென்துரை அவர்கள் புதுக் கேள்விப்பத்திரங்களை அழைக்க அல்லாவிடின் உடனே குத்தகையைப் பிரசித்த ஏலத்தில் விற்க அல்லது 1899 ம் ஆண்டு தொடக்கம் 1905 ம் ஆண்டு வரையும் இயற்றப்பட்ட அபின் கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கிசைய அபின் குத்தகையைத் தமக்குப் பிரியமானபடி வேறுவகைபண்ணும் அதிகாரமுடையவராயிருக்கிறார்.

அநுராதபுரம் லோக்கல்போட் ஆபீஸ்,
1909 ம் ஆு மார்கழி மீ 8 ந் தேதி.

றீ. எ. கேறி,
லோக்கல்போட்டுச் செயர்மென்துரைக்காக.

---

சில்லறையில் அபின் விற்க உத்தரவுப்பத்திரங்கள் கொடுத்தற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்.

1. சில்லறையில் அபின் விற்க உத்தரவுவாங்கினவன் ஆனவன், தக்க அதிகாரமுடையவராலே வாங்கினவன் அவனென்று வெளிப்படுத்திய உடனே, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கை ரொக்கமாகக் கட்டிவிடுதல் வேண்டும். தக்க அதிகாரமுடையார் அந்தத் தொகையைப் பிணையாக வைத்துக்கொள்ளல் வேண்டும் ; கடைசி 2 மாதத்துத் தவணைப்பணத்துக்கல்லாமல் கேள்வித்தொகையின் தவணைப் பணமாக அதை உபயோகிக்கக்கூடாது. கேள்வித்தொகையை ஆறு மாசத்துக்குஞ் சமமான தொகைப் பாகமாய்ப் பிரித்து குத்தகை யிருக்கும்வரையும் மாசந்தோறும் கடைசித் தேதி நாளில் கொடுத்துவிடல்வேண்டும். முதலாந் தவணைப் பணத்தை 1910 ம் ஆண்டு ஜனவரி (தை)மீ 31 ந் தேதியில் கொடுத்துவிடல் வேண்டும். ஒரு தவணைப்பணம் நிலுவையாம்போது நாள் ஒன்றுக்கு நூற்றுக்கு வருஷாந்த ஒன்பது வீதவட்டி கொடுத்தல் வேண்டும். உத்தரவு வாங்கினவனது வேண்டுகோளின்படி பிணைப் பணத்தொகையை அவனுக்குப் பிரியமான ஒரு வங்கியிலே நிலையாய் (டிப்செட்) போட்டுவைக்கலாம்; அதில் ஏதும் நஷ்டம் நேரிட்டால் அது அவன் பாரமாகும். குறித்த தவணைத் தேதியிலே பணங் கொடுக்கத்தவறினால் நஷ்டம் அவனது பாரமாக, தக்க அதிகாரமுடையவர் உத்தரவை மறுபடி விற்கலாம் அல்லது செல்லாமல் நிற்கும் அத்தனை காலமளவு பாகத்தை விற்கலாம்.

2. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப் பத்திரத்துப் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்கவேண்டியது; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

3. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறு எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவு செய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

4. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்புரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

5. தக்க அதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பட்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸ்பட்டர் நிலைமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுப்பெற்ற இடத்தைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினினது வரவுசெலவுக் கணக்கைப்பற்றிய சகல புத்தகங்களையும், காகிதபத்திரங்களையும், கணக்குத் தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனுவன்; மேலும், அப்படிச்செய்யும்படி விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனை காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபினையெல்லாம் இன்ஸ்பட்டர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனுவன்; மேலும் அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில் இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடிய மட்டும் விளக்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

8. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பமான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

9. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் வெறித்திருக்கும் எவனொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

10. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில், இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

11. இலக்கமிட்ட பக்கங்களுடையதாய்க் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திரம் பெறுபவனுக்கு அப்போது விலையில்லாமல் சும்மா

கொடுப்பார். புதுபுத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்கஅதிகாரமுடையவரிடத்தே விலை கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது. அவரிடத்தே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்

12. கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற உடனே அபின் பெற்ற தொகையும் செலவான தொகையுமெல்லாம் கையிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம்; புத்தகத்தின் பந்திக் கோலங்களெல்லாம் சரிவர எழுதி நிரப்பியிருக்கவேண்டும். அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பிலுள்ள தொகையைத் தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

13. ஒவ்வோர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது கையிருப்புப் புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், 20 ம் கொந்திசின்படி வைத்திருக்கவேண்டிய புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைப்பதும் உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட சரியான பிரதிகளுக்காக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலிஸ் இன்ஸ்பெக்டர் பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதிகளைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலிஸ் இன்ஸ்பெக்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதிகள் கிடைத்ததோ என்று விசாரித்து அவை தவறிவிட்டால் இணைப்பிரதிகள் கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஓர் பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்ப்பது இன்ன வகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல்வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுடையவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவனொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெடுக்கவாவது பெற்றுக் கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழிகாரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்த மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்திஸ் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைகாரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரவுப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்ப்பதற்கு யோக்கியனாகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "சில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதின தொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது சருட்டு விற்றலேயல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல் ஒண்ணாது.

19. அவ்விடத்திற்றானே கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது.

20. நாலு டிரும் நிறைக்கு அதிகமான அபினை விற்றபோதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப்பெயரையும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையும் விற்ற தேதியையுங் காட்டி, கையிருப்புப் புத்தகத்திலே "குறிப்பு" பந்திக்கலத்திலே எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டத் தராசுபடிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ், நாலு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ், ஒரு றாத்தல், இரண்டு றாத்தல், நாலு றாத்தல், ஏழு றாத்தலாகிய அவாட்போர்ச் சாமானிய தராத்து நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப் புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னுற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல்வேண்டும்:—

சில்லறையில் அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாதிரிப் பக்கம்:—

| தேதி. | | று. அ. டி. | | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| ஆனி 1.—கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 8 4 | | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 8 2 | | | |
| மொத்தம் | ... | 28 0 6 | ... | இலக்கம் 1 மொத்தவிலையாளன் சுவான்பிள்ளை | |
| கொடுத்தது ... | ... | 1 7 9 | | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 26 8 13 | | | |
| ஆனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | |
| மொத்தம் | ... | 26 8 13 | | | |
| கொடுத்தது ... | ... | 0 15 5 | | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 25 9 8 | | | |
| ஆனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | |
| மொத்தம் | ... | 25 9 8 | | | |
| கொடுத்தது ... | ... | 2 7 1 | | | |

கையிருப்பு ஸ்தொக் புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலீஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை இறுதியட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெலமாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

---

அவாட்போய் நிறை.

| | | |
|---|---|---|
| 16 டிரும் | = | 1 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 றாத்தல் |
| 28 றாத்தல் | = | 1 குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | 1 கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | 1 தொன் |

குறிப்பு.—180 கிறெய்ன் 6·582 அவாட்போய் டிரும்களுக்குச்சரி; அதாவது 7 டிரும்களுக்குக்குறைய.

[Tender for supplying Materials to Salt Stores, Jaffna.]

சாமான்கள் கொடுக்கிறதற்குக் கேள்விப்பத்திரம்.

சாக்கடகம் ஓலைப்பாய், ஓலைடமல், தேங்காய் எண்ணெய், ஆமணக்கெண்ணெய், மண்ணெண்ணெய், பனைஓலை, கம்புக்கட்டு, சுக்குக்கட்டுக் கூடுகதை, அம்புக்கயிறு சாக்கு என்னும் இந்தச் சாமான்கள் கேட்குநேரமே யாழ்ப்பாணம் உப்புமால் கிளிநொச்சி உப்பளம், சொண்டமனூர் உப்புக்குதம் ஆகிய இந்த இடங்களில் கொடுக்கிறதற்கு 1910 ம் ஆண்டு தைமாதம் தொடக்கம் 1911 ம் ஆண்டு ஆனிமாதம் வரையில் ஒப்பந்தம் கேட்க விரும்புவருடைய கேள்விப்பத்திரங்களை ஏற்கப்படும்.

2. கேள்விப்பத்திரம் இணைப்பிரதியாயும் முத்திரை யிடப்பட்டதாயுமிருத்தல் வேண்டும். மூலப்பிரதி வடமாகாண ஏசன்றுத்துரை அவர்களுக்கும் இணைப்பிரதி கொழும்பு அரசிறைவருமானத்தலைவர் கந்தோருக்கும் விலாசம் போட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் கேள்விக்காரன் தானுகக் கொடுக்கலாம் அல்லது தபாலில் அனுப்பலாம். இரண்டு பிரதிகளும் ஒரேநேரத்தில அனுப்பப்படல் வேண்டும.

4. கேள்விப்பத்திரத்தில் "Tender for supplying materials, 1910" என்று உறையின் இடதுபக்க மேல் மூலையில் போடப்பட்டிருத்தல் வேணும். அப்பத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரியில 1909 ம் ஆண்டு மார்கழிமாதம் 20 ந் தேதி பின்பகல் 2 மணிக்கு முன் சேரவேண்டும்.

5. கேள்விப்பத்திரம் எழுத மாதிரிக்கடுதாசி யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். அந்த மாதிரிக் கடுதாசியில் எழுதாத வேறு எவ்விதப் பத்திரமும் ஏற்கப்படமாட்டாது.

6. கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பற்றுச்சீட்டுக் காட்டினவருக்கே மாதிரிக்கடுதாசி கொடுபடும். ஒருவருடைய ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக்கொண்டதென்று அறிவித்தல் அவர் கேட்ட நாள் தொடக்கம பத்து நாளைக்குள் ஒப்பந்தம் ஏற்க பிணைகொடுக்க அல்லது உறுதிமுடிக்க தவறினுல் கட்டின காசு களவு மேற்றுக்கு இனுமாகும். ஒப்பந்தம கைச்சாத்திட்டு முடிவானவுடன மற்றக் கேள்விக்காரருடைய காசு திருப்பிக் கொடுபடும்.

7. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியானபேர் பிணையிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அனுப்பியிருக்கவேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்க வேண்டும்.

8. ஒப்பந்தம் கொடுக்குங்காலில் கொடுக்கவேண்டிய சாமான்களுக்கு மாதிரிப் பொருட்களும் கொடுக்கவேண்டும்.

9. ஒப்பந்தத்தைச் சரியாய் ஒப்பேற்றுவதற்காக போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேண்டும். பிணையுறுதியின் தொகையும் வேறுவித தேவையான விபரங்களும் கந்தோரில் கேட்டுக்கொள்ளலாம்.

10. மேற்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு அமையாத யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப் படமாட்டாது.

11. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயம் சொல்லாது மறுக்க முழு உரித்தும் கவண்மேந்துக் குண்டு.

ஈ. பீ. ஹியூக்ஸ்,
அரசாட்சி ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1909 ம் ஞு நொவெம்பர்மீ 30 ந் உ.

[Supreme Court Criminal Sessions at Colombo.]

இலங்கைத்தீவிற் சுவைகைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நான் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்தில மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் மேற்குப்பிரிவைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1910 ம் ஆண்டு தை (ஜனவரி)மாதம் 10 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்தில சொல்லப்பட்ட இடத்தில வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
இ. ஒண்டாச்சி,
டிப்பியுடி பிஸ்கால்.

பிஸ்கால் கந்தோர், கொழும்பு,
1909 ம் ஞு டிசெம்பர்மீ 13 ந் உ.

[Supreme Court Criminal Sessions at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிரீம் கோட்டாரது கட்டளையின்படி நான் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீம் கோட்டாரால கொழும்புத்தலங் டிவிஷனுக்குச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1910 ம் ஆண்டு தை (ஜனவரி)மாதம் 10 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்தில வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
எஸ். டி. சமரசிங்க,
பிஸ்காலுக்காக.

பிஸ்கால் கந்தோர்,
1909 ம் ஞு மார்கழிமீ 13 ந் தேதி.

[Postponement of Election of Unofficial Members, Local Board, Kalutara.]

இத்தால் அறிவிப்பது 1910 ம் ஆண்டு தைமீ 1 ந் தேதி துவக்கம் 2 வருஷத்துக்கு களுத்துறை ஸனிடேரி சங்கத்திற்கு உத்தியோகமில்லாத அங்கத்தவர்களைத் தெரிந்துகொள்ளும்படி 1909 ம் ஆண்டு மார்கழிமீ 17 ந் தேதி வெள்ளிக்கிழமை காலமே 9 மணிக்கு களுத்துறை நகரசங்கத்தில் வைக்க இருந்த கூட்டம் கூடப்படாது.

அந்தக்கூட்டம் 1909 ம் ஆண்டு மார்கழிமீ 29 ந் தேதி புதன்கிழமை காலமே 9 மணிக்கு களுத்துறை நகரசங்கத்தில் வைக்கப்படும்.

எல். டபிள்யு. பூத்,
மேல்மாகாணத்து அரசாட்சி ஏசன்று.

கொழும்பு கச்சேரி,
1909 ம் ஞு மார்கழிமீ 13 ந் தேதி.

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

தொழிலுக்குட்படாதவர்களின் அறிவித்தல்.

[E. Simeon.]

கண்டி கொழும்பு வீதி 141 ம் நொம்பர் வீட்டில் வசிக்கும் எட்வார்ட் சிமியோனுகிய நான் 1907 ம் ஆண்டு 1 ம் இலக்கச் சட்டத்தின் B என்னும் செடுவின் 2 ம் விதிப்படி கண்டிப்பிரிவில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசுவாக வேலைபார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படவும் பதிவுசெய்யப்படவும் இன்றுமுதல் மூன்று மாதத்தின் பின் பதிவுகந்தோர் தலைவரிடம் உத்தரவு கேட்பேனென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

ஈ. சிமியோன்.

கொழும்பு வீதி 141 ம் நம்பர்,
கண்டி, 1909 ம் ஞு நவம்பர்மீ 30 ந் உ.

[B. M. Rodrigo.]

அளுத்கமகூர் கோறளே ராகம்பத்துவில் பமுனுகம உஸ்வெட்டக்கய்யாவில் வசிக்கிற வஸ்தியான் கோரா லலாகே மார்ஷல் ருதிரீகுவாகிய நான் இரட்ணபுரி டிஸ்திரிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக வேலைபார்ப்பதற்கு 1907 ம் ஆண்டு 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பங்கு 1 B செக்ஷனின்படி இத்திகதி துவக்கம் மூன்று மாதத்திற்குப்பின் பதிவுகர்த்தா தலைவர் அவர்களிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல்கொடுக்கிறேன்.

பி. எம். ருதிரீகு.

உஸ்வெட்டகெய்யாவ, பமுனுகம,
1909 ம் ௵ கார்த்திகைமீ 29 ந் தேதி.

---

[H. A. Fonseka.]

களுத்துறை டிஸ்திரிக்கைச்சேர்ந்த வாத்துவையிலிருக்கும் ஹேவாபொன்சேக்காகே அல்பேட் பொன்சேக்கா என்பவர் இன்று முதல் மூன்று மாசம் சென்றதின்பின் களுத்துறை டிஸ்திரிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக 1909 ம் ௵ 1 ம் நம்பர் 8-வது பிரிவில் 1/B அட்சரத்தின்பிரகாரம் ரிஜிஸ்திரார் ஜெனரால் அவர்களிடம் கேட்க ஆரம்பித்திருக்கிற செய்தி இத்தாலறிவிக்கிறேன்.

எச். ஏ. பொன்சேக்கா.

1909 ௵ நொவெம்பர்மீ 22 ந் தேதி.

---

[P. L. Tissera.]

களுத்துறை டிஸ்திரிக்கு பாணந்துறை தொட்டமுனே குடாவாத்துவையிலிருக்கும் ஹாயின் திசேரு சந்தநாயகேயாகிய நான் 1907 ம் ஆண்டு முதலாம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 6 ம் பிரிவின்படி களுத்துறை டிஸ்திரிக்கின் றயிகம் கோறளையில் மூங்வத்தே பாகேபத்துவெகே ஹேல்ஹேநாவேயில் சிங்கள பாஷையில் பிரசித்த நொத்தாரிசுவாக வேலை பார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படவும் பதிவுசெய்யப்படவும் இன்றுமுதல் மூன்று மாசத்துக்குப்பின் பதிவுகர்த்தா தலைவர்களிடம் உத்தரவு கேற்பேனென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

பி. எல். திசேரு.

குடாவாத்துவை,
1909 ம் ௵ மார்கழிமீ 3 ந் உ.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.